பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)**

**கையிறுப்பு செயல்திறன் காப்புறுதிப் பத்திரம்**

இந்த ஆவணமானது, உங்களது காப்புறுதியைப் பற்றிய சாராம்ச விளக்கமொன்றை வழங்குகின்றது. பூரண விபரங்களுக்கு, முழுமையான காப்புறுதிப் பத்திரத்தையும் அட்டவணையையும் உசாவவும், ஏதும் முரண்பாடு காணப்பட்டால், காப்புறுதிப் பத்திரமே மேலோங்கியிருக்கும்.

1. **காப்புறுதி காப்பீட்டு வகை**

   **கையிறுப்பு செயல்திறன் காப்புறுதிப் பத்திரமானது,** உங்களுடைய ஆடை மற்றும் தேயிலை கைத்தொழில் சம்பந்தப்பட்ட கையிருப்பை வழங்கள் வலையமைப்பு பூராவும் தடையின்றி பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்டை விசேடத்துவமான பொதியொன்றாகும்..

2. **பிரதான பயன்பாடுகள் (எதனைக் காப்பீடு செய்கின்றது)**

   உங்களுடைய **காப்புறுதி அட்டவணையில்** குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்கு உட்பட்டு, வழங்கல் வலையமைப்பின் ஒவ்வொரு படிநிலையிலும் உங்களது கையிருப்பு சரக்குகளுக்கு பாதுகாப்பளிக்கின்றது.

   பின்வரும் நிலைமைகளில் ஏற்படக் கூடிய பௌதீக இழப்பு அல்லது சேதத்திலிருந்தும், உங்களது காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரயோகமாகத் தக்க காப்பீடுகளின்படி, உங்களது கையிருப்பு சரக்குகளை இக்காப்புறுதிப் பத்திரம் **பாதுகாக்கின்றது.**

   2.1 **இறக்குமதி –** உங்களுடைய மூலப் பொருட்களும் மற்றும் ஏனைய பொருட்களும், உங்களுடைய வெளிநாட்டு வழங்குனரின் களஞ்சியச்சாலையிலிருந்து வெளிப்பட்ட நேரத்தில் இருந்து உங்களது உற்பத்திச் சாலைகளுக்கு அல்லது களஞ்சியச்சாலைகளுக்கு எடுத்துவரப்படும் நேரம் வரை உங்களது சரக்குகளை காப்பீடு செய்கின்றது.

2.2 **களஞ்சியப்படுத்தல் –** உங்களது கையிருப்புச் சரக்குகள், உங்களது தொழிற்சாலைகளிலும், அத்தோடு உங்களது காப்புறுதிப் பத்திரத்தில் பட்டியலிடப்பட்டுள்ள குறிப்பிட்ட உப ஒப்பந்தக்காரரின் மற்றும் மூன்றாம் தரப்பினரின் களஞ்சியசாலைகளிலும் களஞ்சியப்படுத்தப்பட்1டுள்ள அல்லது பதப்படுத்தப்படுகின்ற நிலையில் (பதனிடல் நியதியின் கீழ்) காப்பீடு செய்கின்றது.

2.3 **ஏற்றுமதி –**சரக்குகள் இலங்கையில் உள்ள உங்களது உற்பத்திச்சாலைகளில் இருந்து இலங்கையிலுள்ள எந்தவொரு துறைமுகத்துக்கும் அல்லது உலகின் எவ்விடத்திலும் இருக்கும் உங்கள் வாடிக்கையாளரின் இறுதி களஞ்சியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் போது, (நிபந்தனைகளுக்கும்) கப்பற்சரக்கின் INCO

நியதிகளுக்கும் உட்பட்டு உங்களது முடிவுற்ற பண்டகங்களை காப்பீடு செய்கின்றது.

3. **பிரதான விடுகைகள் (காப்பீடு செய்யப்படாதன) சரக்கு நிறுவன நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொது விடுகைகளுக்கு மேலதிகமாக,**

3.1 **பதனிடப்படும் போது சேதமுறுதல் –** உற்பத்தி அல்லது பதனிடல் செயற்பாட்டின் நேரடி விளைவான சேதங்களை காப்பீடு செய்யாது.

3.2 **இயல்பான மற்றும் கிரமமான சேதம் –** சரக்குகளின் இயற்கையான தன்மைகள், தேய்மானம், துருப்பிடித்தல், ஒட்சியேற்றம் அல்லது கிரமமான மோசமடைதலின் விளைவான இழப்பு அல்லது சேதம் காப்பீடு செய்யப்படவில்லை.

3.3 **மர்மமான முறையில் காணாமற் போதல் –** விளக்கப்பட முடியாத, அல்லது கையிருப்பு பரிசோதனையின் போது மாத்திரமே கண்டுபிடிக்கப்பட்ட இழப்புகள் காப்பீடு செய்யப்படவில்லை.

3.4 **ஊழியர் களவு –** உங்களது ஊழியர் அல்லது முகவர் செய்யும் களவு நீக்கப்படுகின்ளது.

3.5 **விடுகை செய்யப்பட்ட / வெளிடப்படுத்தப்படாத இடங்கள் –** யுத்தத்தில் இருக்கும் அல்லது சர்வதேச தடைகளுக்கு ஆளாகியுள்ள நாடுகளை நோக்கியதும் அல்லது அவற்றிலிருத்துமானதுமான அல்லது அவற்றில் களஞ்சியப்படுத்தப்பட்டு உள்ளவையுமான கப்பற்சரக்குகள் காப்பீடு செய்யப்படவில்லை.

3.6 **உத்தரவாதத்தை மீறல் –** குறிப்பான காப்புறுதிப் பத்திர உத்தரவாதங்களை பின்பற்றாமையினால் ஏற்படும் ஏதும் இழப்புகள் காப்பீடு செய்யப்பட்டில்லை.

3.7 **வியாபார இடையூறு / விளைவாந்தன்மையான இழப்புக்கள் -** காப்புறுதிப் பத்திரத்தினால் காப்பீடு செய்யப்பட்ட இலாப இழப்பு.

## 4 காப்புறுதிக் கட்டணம் செலுத்தும் முறை

**ஆகவும் குறைந்ததும் மற்றும் காப்புறுதிக் கட்டண வைப்பீடும் தொடக்கத்திலேயே செலுத்தப்பட வேண்டும்.** காப்புறுதிப் பத்திர ஆண்டின் இறுதியில், உங்களது உண்மையான மொத்த செயற்பாட்டின் அடிப்படையில் இயைபாக்கப்படும். நீங்கள் மேலதிக காப்புறுதிக் கட்டணமொன்றை செலுத்த வேண்டி ஏற்படலாம். ஆகவும் குறைந்ததும் மற்றும் வைப்பீட்டுக் காப்புறுதிக் கட்டணமும் அறவிடப்படுவதனால், மீள்செலுத்துகை அனுமதிக்கப்பட மாட்டாது.

## 5 காப்புறுதிப் பத்திரமுடையோர் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தும் கடமைப்பாடுகள்

விலைமனுவை பெற்றுக் கொள்ளும் போதும், காப்புறுதி ஒப்பந்தம் செய்யும் போதும் மற்றும் காப்புறுதிக் காலத்தின் போதும், எல்லா முக்கிய தகவல்களையும் சம்பூரணமாகவும் வெளிப்படையாகவும் வெளியிட வேண்டியது காப்புறுதி பெறுநர் அல்லது காப்புறுதி தரகர் ஆகியோரது கடப்பாடாகும்.

## 6 கோரிக்கையொன்று முன்வைக்கப்படும் போது காப்புறுதி பெருநரின் கடமைப்பாடுகள்.

6.1 மேலும் இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதில் இருந்தும் பண்டகங்களைப் பாதுகாப்பதற்குரிய சகல நியாயமான நடவடிக்கைகளையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

6.2 **காப்புறுதிப் பத்திர உத்தரவாதங்கள்** சகலதையும் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். இவை, உங்களது சரக்குகள் எவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட வேண்டும் மற்றும் கையாளப்பட வேண்டும் என்பதற்கான கடுமையான சட்டங்களாகும்.(உ+ம். பாதுகாப்பு, அடுக்கும் உயரம், “புகை பிடிக்கக் கூடாது” என்ற சட்டம், அடுக்கு அடிச்சட்ட உத்தரவாதம், வெப்ப செயற்பாடுகள்)/ உத்தரவாதமொன்றை பின்பற்றத் தவறுவதானது, உங்களது கோரிக்கையை வலுவிழக்கச் செய்யலாம்.

6.3 உங்களுடைய மீள்பெறுதல் உரிமைகளைப் பாதுகாக்கும் முகமாக, பொறுப்புடைய மூன்றாம் தரப்பினருக்கு (உ+ம். கப்பல் போக்குவரத்து நிறுவனம், விமான போக்குவரத்து நிறுவனம், சரக்கு கொண்டு செல்வோருக்கு) எதிராக உடனடியாக கோரிக்கையொன்றை உடனடியாகக் கோவையிடவும்.

காப்புறுதிப் பத்திர ஆவணத்தோடு இணைக்கப்பட்டுள்ள ‘முக்கிய நியதி’ யை உசாவவும்.

## 7 கோரிக்கையொன்று முன்வைக்கப்படும் போது பின்பற்றப்படவேண்டிய நடைமுறை

**படிமுறை 1 – உடனடியாக எமக்கு அறிவிக்கவும்**

ஏதும் இழப்பு அல்லது சேதம் பற்றி அறிந்த உடனேயே பயார்பஸ்ட்டை தொடர்பு கொள்ளவும்.

களவுச் சம்பவத்தின் போது நீங்கள் உடனடியாக பொலீசுக்கு அறிவிக்க வேண்டும்.

உங்களுடைய மீள்பெறுதல் உரிமைகளைப் பாதுகாக்கும் முகமாக, பொறுப்புடைய மூன்றாம் தரப்பினருக்கு (உ+ம். கப்பல் போக்குவரத்து

நிறுவனம், விமான போக்குவரத்து நிறுவனம், சரக்கு கொண்டு செல்வோருக்கு) எதிராக உடனடியாக கோரிக்கையொன்றை உடனடியாகக் கோவையிடவும்.
காப்புறுதிப் பத்திர ஆவணத்தோடு இணைக்கப்பட்டுள்ள 'முக்கிய நியதி' யை உசாவவும்.

**படிமுறை 2 – கோரிக்கை அலகுடன் தொடர்பு கொள்ளவும்**

கோரிக்கைகளுக்காக காப்புறுதிப் பத்திரத்தினால் தொடர்பாளர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். உங்கள் அறிவித்தல்களை அவர்களுக்கு முன்வைக்க வேண்டும்.

**தொடர்பாளர்கள்** – லஹிரு பெரேரா (0777-238053), உதார அத்தப்பத்து (011-242881)

**மின்னஞ்சல்** – lahirup@fairfirst.lk, udaraa@fairfirst.lk

**படிமுறை 3 – முழுமையாக ஒத்துழைக்கவும்** – நாம் நியமிக்கும் மதிப்பீட்டாளர்கள் / இழப்பு இயைபாக்குனர்கள் ஆகியோருடன் நீங்கள் ஒத்துழைக்க வேண்டியதோடு, உங்களது கோரிக்கைக்கு ஆதாரமான தேவைப்படும் சகல ஆவணங்களையும் வழங்க வேண்டும்.

## 8 முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎ +94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk |

🌐 www.insuranceombudsman.lk

## 9 மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
☎ +94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

## 10 வேறேதும் தகவல்கள்

10.1 **உத்தரவாதங்கள் அதிமுக்கியமானவையாகும்** – இந்த காப்புறுதிப் பத்திரமானது, முக்கியமான **உத்தரவாதங்கள் (கடுமையான விதிகள்)** பலவற்றைக் கொண்டுள்ளது. எந்நேரத்திலும் நீங்கள் இந்த விதிகளைப் **பின்பற்ற வேண்டும்**. அவ்வாறு செய்யத் தவறுவது, உங்கள் கோரிக்கை நிராகரிக்கப்படுவதற்கு வழிகோளலாம்.

10.2 **கழிக்கத்தக்கன** – கோரிக்கையின் முதற் பகுதியை நீங்களே செலுத்த வேண்டும். இது, இடத்தைப் பொறுத்து வேறுபடலாம். இந்தத் தொகை உங்களது காப்புறுதிப் பத்திர அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

10.3 **குறை காப்புறுதி (சராசரி நியதி)** – ஓரிடத்தில் / இடமாற்றலில் உங்களது கையிருப்பின் மொத்தப் பெறுமதியானது, காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அவ்விடத்திற்குரிய / இடமாற்றலுக்குரிய வரையறையை விடக் கூடியதாயின், அந்த வித்தியாசத்தைப் பொறுத்த வரை நீங்களே அதன் காப்புறுதி வழங்குனர் எனக் கருதப்படுவதோடு, உங்களது கோரிக்கைக்கான செலுத்துகை விகிதாசாரமாக குறைக்கப்படும்.

**குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்.